**தேசிய கைப்பணிகள் சபை - 2023**

**------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கைப்பணிகள் சபையின் (“சபை”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- பயன்படுத்துகின்ற கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக செயற்படுவதனை முடிவுறுத்தலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட:டு நியமங்களுடனான இணக்கமின்மை

| உரிய நியமங்களுடனான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலகக்கம் 09 இன் 44 மற்றும் 47 ஆம் பந்திகளின் பிரகாரம் இருப்புக்கள் தொடர்பான அனைத்து நட்டங்களும் காலப்பகுதிக்கான செலவாக அடையாளங் காணப்பட வேண்டிய போதிலும் வராகொடை பயிற்சி நிலையத்தின் ரூபா 1,320,396 கிரயமான 2,099.5 கிலோ கிராம் செம்புக் கம்பி இருப்பு காணாமல் போயிருந்தும் அது சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) விற்பனை முகவர்களுக்கு வழங்கிய இருப்புக்களில் மீளாய்வாண்டில் விற்கப்பட்டுள்ள ரூபா 154,228 இருப்புக்கள் சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட இருப்புக்களில் விற்கப்படுகின்ற இருப்புக்களை வருமானமாக எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை | விற்பனை வருமானத்தை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்படும். | |
| (ஆ) | தேசிய கைப்பணிகள் சபையின் பயிற்சி நிலையங்களில் பேணப்பட்டு வருகின்ற 75 வங்கி கணக்குகளின் மொத்த மீதியான ரூபா 4,217,663 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நிலையங்களுக்குரிய வங்கி கணக்கு மீதிகள் 2024 ஆம் ஆண்டிலிருந்து இறுதிக் கணக்குளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து வங்கி கணக்குகளின் விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு தொடர்பாக 2024 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 1,374,177 செலவு சம்பந்தமாக நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை . | 2023/12/31 ஆந் திகதியின் பின்னர் கணக்குகள் பிரிவிற்கு கிடைத்த அனைத்து கொடுப்பனவுகளும் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்கலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்கான செலவுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது கைப்பணிகள் சபைக்கு விற்கப்பட்ட பொருட்களுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,432,122 மீதியினையும் சபையினால் அச்சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 84,600 மீதியினையும் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது. | லக்சல நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி சம்பந்தமாக ஏதாவது இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு இரண்டு நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் நடவடிக்கை எடுத்துள்ளன. | கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தாமதமின்றி தீர்த்துவைத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.14(அ) ஆம் பந்தி | அனைத்து எதிர்கால கேள்விதாரர்களுக்கும் ஒரே தவல்கள் வழங்கப்பட வேண்டியதுடன் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக | அனைத்து கேள்விதாரர்களுக்கும் சமமான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்த பெறுமதி திருத்தம் செய்யப்படவில்லை. | அனைத்து எதிர்கால கேள்விதாரர்களுக் கும் ஒரே தகவல் வழங்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| அவர்களுக்கு சமமான சந்தர்ப்பம் வழங்குதல் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக இரண்டாம் கேள்விதாரருக்கு மாத்திரம் அதனைத் தெரியப்படுத்தி பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைத்து ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | கேள்விதாரர்கள் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை குறைத்து ஒப்பந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,019,195 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,877,209 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 3,141,986 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மொத்த வருமானம் ரூபா 36,298,138 ஆல் அதிகரித்தலுடன் ஒப்பிடுகையில் மொத்த செலவு ரூபா 39,440,124 ஆல் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை அனைத்து மாகாணங்களையும் மற்றும்மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 178 கைப்பணிச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் கைப்பணிச் சங்கங்களைப் பதிவுசெய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தேசிய கைப்பணிகள் சபையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பதிவு செய்தலினைத் தவிர்த்து ஏனைய எந்த மேற்பார்வையும் வழிகாட்டலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கைப்பணிச் சங்கங்களிலுள்ள அனைத்து அங்கத்தவர்களுக்கும் தெரியப்படுத்துவதற்காக முறையான ஒரு வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | கைப்பணிச் சங்கங்களின் செயற்திறன் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் 379,645 போசிலேன் ரீல் இன்சுலேட்டர்களையும் 39,135 போசிலேன் புல்னோஸ் இன்சுலேட்டர்களையும் தயாரித்து வழங்கும் ஒப்பந்தம் 2021 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் கம்பனிக்கு ஒப்படைத்து அறவீடு | உரிய நிறுவனத்தினால் மூலப் பொருட்கள் மற்றும் அரைவாசி பூர்த்திசெய்த இருப்புக்களை திட்டமிடப்பட்டுள்ள முழுமையாக | சரியான ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாது தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்தும் 2022 திசெம்பர் மாதம் வரை வழங்கப்பட்டிருந்த போசிலேன் ரீல் இன்சுலேட்டர்களின் அளவு 112,071 மற்றும் போசிலேன் புல்னோஸ் ஸ்ட்ரோயின் இன்சுலேட்டர்களின் அளவு 11,996 ஆகும். அது உடன்படிக்கை செய்த அளவில் 30 சதவீதம் மாத்திரமாகும். 2023 மார்ச் மாதம் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தும் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | பூர்த்திசெய்த பொருட்களாக மாற்றுவதற்கு சராசரி சேவைக் கட்டணத்தின் கீழ் சந்தர்ப்பம் வழங்குமாறு வேண்டிக்கொள்ளப்பட்டதனால் அதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 2,065,904 தொகையான நிறுத்திவைத்தல் மீதிக்குரிய செயற்பாடுகள் பூர்த்தியடைந்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி இந்த நிறுத்திவைத்தல் பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வராகொட மடபாண்ட பயிற்சி நிலையம் தொடக்கமாக மட்பாண்ட பயிற்சி கற்கை நெறியை அமுல்படுத்துவதன் மூலம் தொழில்நுட்பவியலாளர்களுக்கு சேவைகளை வழங்குவதனை முன்னிட்டு தோற்றுவிக்கப்பட்டிருந்தும் 05 பிரிவுகளுக்குரிய மின்சாரப் போரணைகள், விறகு போரணைகள், கேஸ் போரணைகள், போல்மில் இயந்திரம், அளவை செய்யும் தராசுகள், பிளன்ஜர் என்பனவாக ரூபா 19,415,490 பெறுமதியான இயந்திரங்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து | மட்பாண்ட பயிற்சி கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு முன்னர் செங்களி மண் பயிற்சி கற்கைநெறி 2022 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அக்கற்கை நெறியை பூரணப்படுத்திய பயிலுனர்களுக்கு 2024 மே மாதத்திலிருந்து மட்பாண்டம் சார்ந்த கலை மற்றும் சிற்பக்கலை உயர் சான்றிதழ் கற்கை நெறியை அழகியல்கலை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களின் பங்களிப்ப்பில் | பயிற்சி நிலையத்தின் சொத்துக்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்றுக் காணப்பட்டன. மேலும் ரூபா 2,800,000 பெறுமதியான 02 போல்மில் இந்திரங்களும் 03 மின்சார பேராணைகளும் பல ஆண்டுகளாக செயற்படாது காணப்பட்டன. | ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டது. அக்கற்கை நெறியை பேணும் போது அனைத்து உபகரணங்களும் முழுமையாகப் பயன்படுத்தப்படும். | |
| (ஆ) | வராகொட மொலகொட, பொல்கொல்ல மற்றும் புலத்சிங்ஹல பயிற்சி நிலையங்களை தோற்றுவிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த மூலப்பொருள் வங்கிக்காக 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த 1,136,076 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் இணைத்துக்கொள்ளப்பட்ட செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 64,600 பெறுமதியான 76 கியூப்கள் களிமண் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | மூலப் பொருள் வங்கியை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2013 ஆம் ஆண்டிலிருந்து நீண்டகால குத்தகை அடிப்படையில் காவந்திஸ்ஸபுர கிராமத்தை நிர்மாணிப்பதற்காக 1.6187 ஹெக்டயர் காணி திஸ்ஸமஹராம பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு குத்தகையாக ரூபா 3,360,000 தொகை மற்றும் இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி ரூபா 18,432,042 தொகை மற்றும் சபையினால் ரூபா 8,744,211 தொகை செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரை காணியும் கட்டிடங்களும் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | இச்செயற்திட்டமானது இந்திய அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டதனால் இன்னும் 06 மாதங்கள் ஏனைய மாற்று முதலீட்டிற்காக சந்தர்ப்பம் வழங்கி அதுவும் வெற்றியளிக்கவில்லையாயின் மீண்டும் பிரதேச செயலகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டது. | காவந்திஸ்ஸபுர கிராமத்தினை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்றிட்டம் அல்லது மூலதன வேலைகள் தாமதித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மூன்று பிரம்பு இயந்திரங்களை தயாரிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 3,850,740 செலுத்தப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உரிய இயந்திரம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கட்டுபெத்த தலைமை அலுவலகத்தின் மூலம் 90 சதவீதம் அளவானவை பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த 03 இயந்திரங்களும் 2024 யூன் 25 ஆந் திகதிக்கு முன்னர் எங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்படும் என எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. | இயந்திரங்களை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |